எழுத்து

இலக்கிய விமர்சன மாத ஏடு

ஆசிரியர் :
சி.சு. செல்லப்பா

பத்தாம் ஆண்டு

உலக தமிழ் கருத்தரங்கு மகாநாடு

த. எ. சங்கமும் செயற்குழு தேர்தலும்

இரா. மீனுட்சி, எழில்முதல்வன்,

நீல. பத்மநாபன்,

கவிதைகள்

50 பைசா

மார்ச்-1968

111

ஆசிரியர்: சி. சு. செல்லப்பா   மார்ச் '68

இங்கிலீஷ் மாதம் தோறும் முதல் தேதியன்று வெளிவரும்.

ஆசிரிய காரியாலயம்: எழுத்து, 19-A, பிள்ளையார் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

சந்தா விகிதம்: தனிப்பிரதி 50 பைசா. ஒரு ஆண்டு ரூ. 6/- வெளிநாடு: ஆண்டுக்கு ரூ. 8/-

கடிதப் போக்குவரத்து, கட்டுரை அனுப்புதல்: மேலே கண்ட முகவரிக்கு ஆசிரியர், மானேஜர் என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

தமிழ் எழுத்தாளர் சங்கமும் செயற்குழு தேர்தலும்

பதினைந்து ஆண்டுகளாக சென்னையில் நடந்துவரும் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் இந்த ஆண்டு செயற்குழு தேர்தல் பேரவைக் கூட்டம் அதன் சரித்திரம் காணாத பரபரப்பும் அக்கறையும் சுவாரஸ்யமும் கொண்டதாக இருந்தது. இந்த ஆண்டு தலைவர் தேர்தலே போட்டியில் நடந்தது. சோ. சிவபாதசுந்தரம் (137 ஓட்டுகள்) சு. வேம்புவை (67 வாக்குகள்) தோற்கடித்து தலைவரானார். 1959லும் 1960லும் க. நா. சுப்ரமண்யம் இரண்டு முறை போட்டியிட்டார். மீ. ப. சோமசுந்தரம், கா அப்பாத்துரை இருவரும் அவரை தோற்கடித்தார்கள். அதுக்குப்பின் எட்டு ஆண்களுக்குப் பின் போட்டி இந்த ஆண்டு இருந்தது.

இந்த பத்தாண்டு காலத்தில் மீ. ப. சோமசுந்தரம், (1959) கா. அப்பாத்துரை (1960) அன்பு கணபதி (1961—62) மயிலை சீனி வேங்கடசாமி (1963). டாக்டர் சங்கரராஜு (1964) சோம. லெக்ஷ்மணன் செட்டியார் (1965) அழ வள்ளியப்பா (1966) அகிலன் (1967) ஆகியோர் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள்.

அதேபோல செயலாளர்களாக அழ வள்ளியப்பா (1959) ஊ ஜயராமன் (1960) மா. இளஞ்செழியன் (1961) பா. பாலசுப்ரமண்யன் (1962-63) ஊ. ஜயராமன் (1964) எம். எஸ். கமலா (1965-66) மா. சு சம்பந்தம் (1967) ஆகியோர் செயலாளர்களாக போட்டியின்றியும், போட்டியில் வெற்றிபெற்றும் இருந்திருக்கிறார்கள்.

இந்த எட்டாண்டு காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் போட்டி இல்லாமல் இருக்க ஏற்பாடு செய்து, போட்டியிட முன் வந்தவர்களை வற்புறுத்தி வாபஸ்பெறச் செய்து போட்டி தவிர்க்கப்பட்டது. ஆனால் முன் ஆண்டுகளில் போட்டியை தவிர்க்க வழிவகை கையாண்டவர்கள் இந்த ஆண்டு அந்தவித முயற்சி செய்யாமல் இருந்துவிட்டார்கள். போட்டி நடக்க விட்டுவிட்டார்கள் என்று சொல்லலாம்.

இந்த ஆண்டுக்கான செயற்குழுவை தேர்ந்தெடுக்க, சென்ற 11-2-68ல் பேரவை கூடியது. பேரவைக்கு வருபவர்களிடையே இருந்து பெயர்கள் பிரேரேபிக்கப்பட்டு தேர்தல் நடப்பது வழக்கம். செயலாளர் பதவிக்கு மும்முனைப் போட்டி இருந்தது. மூவரில் நான் ஒருவன். கோ. பன்னீர் செல்வம் (90 வாக்குகள்) பெற்று என்னையும் (18 வாக்குகள்) அன்புப்பழம் நீ (14 வாக்குகள்) இருவரையும் தோற்கடித்து 'தம்பிங்மெஜாரிட்டி'யில் வெற்றி பெற்றார். அவருக்கு என் பாராட்டு.

இப்போது இந்த தேர்தல் சம்பந்தமான சில விஷயங்களை குறிப்பிட விரும்புகிறேன். இந்த சங்கத்தோடு என் தொடர்பு ஆரம்பம் முதலே. 1951ல் கல்கியை தலைவராகக் கொண்டு சில முக்யஸ்தர்கள் மட்டும் அடங்கிய செயற்குழுவாக இருந்தது. ஒரு கூட்டத்துக்கு க. நா. சுப்ரமண்யம், சிதம்பர ரகுநாதன், அ. கி. ஜயராமன், வானீசரணன் நான் ஆகியோர் போய், சங்கத்துக்கு நிறைய உறுப்பினர்கள் (தி. மு. க. கம்யூனிஸ்ட் எழுத்தாளர்கள் உள்பட) சேர்த்துத்தான் தேர்தல் நடத்தவேண்டும் என்று போராடி அப்படியே நடந்தது. புதியவர்கள் செயற்குழுவில் கிடைக்க வழி ஏற்பட்டது. அவ்வப்போது செயற்குழுவில் உறுப்பினராகவும் ஒரு சமயம் துணைச் செயலாளனாகவும் இருந்திருக்கிற நான் இந்த ஆண்டு செயலாளர் பதவிக்கு நின்றேன். நான் நிற்பதை உறுப்பினர்களுக்கு அறிவித்து ஆதரவு கேட்டு கடிதம் எழுதியதோடு நின்றுவிட்டேன். முன்பு க. நா. சு. நின்றபோதும் இதேமாதிரி செய்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஆனால் க நா. சு. வை தோற்கடிக்க அந்த இரண்டு தடவையும் கங்கணம்கட்டிக்கொண்டு கோஷ்டியாக வேலை செய்து, கார்களில் உறுப்பினர்களை கொணர்ந்து 'தக்காருக்குத் தக்கபடி பேசி பிரசாரம் செய்து (சிலர் வாயிலிருந்து உண்மை தானாகவே இன்று வெளிப்படுகிறது) வெற்றி சம்பாதிக்கப்பட்டது.

(11-ம் பக்கம் பார்க்க)

இரண்டாவது உலகத் தமிழ் கருத்தரங்கு - மகாநாடு

சி. சு. செல்லப்பா

[சென்ற இதழின் தொடர்ச்சி]

பாரதியும் அக்கினி குஞ்சும்

பிறகு பாரதியின் கவிதைகளில் இயற்கை என்பது பற்றி மஹேஸ்வரி மகாதேவா என்ற இலங்கையர் கட்டுரை படித்தார். அதே சமயத்தில் தமிழ் கருத்தரங்கில் தமிழ் சமூக நாவல்களின் தோற்றமும் வளர்ச்சியும்' பற்றி ரா. தண்டாயுதம் கட்டுரை படிக்கப்பட்டதை கேட்கப் போய் வந்ததால் இந்த கட்டுரையில் பின் பகுதியைத்தான் கேட்க முடிந்தது. பார்தி உபயோகப்படுத்தி உள்ள சில குறியீடுகளை எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தார். குறியீடுகளை மட்டும் கொண்டு அவைகளை குறியீட்டியல் கவிதைகள் (சிம்பாலிக்) என்று அவர் குறிப்பிட்டது மாதிரி இருந்தது. கட்டுரை மீண்டும் படிக்கக் கிடைத்தால் அதைப் பற்றி ஆராயலாம். அந்த கருத்தரங்கில் பாரதியின் 'அக்கினிக்குஞ்சு' பற்றி குறிப்பிடப்பட்டது. அது ஒரு நகைச்சுவை கவிதையா, இல்லை வேறு தொனி கொண்டதா என்று ந. சஞ்சீவி கட்டுரையாளரை கேட்டார். கட்டுரையாளரும் அது நகைச்சுவை கவிதைதான் என்று குறிப்பிட்டதும் எனக்கு வியப்பாக இருந்தது. 'அக்கினிக்குஞ்சு' பற்றி ஒரு ஆய்வுக் கட்டுரை நான் 'எழுத்து'வில் சில ஆண்டுகளுக்கு முன்பு எழுதி இருப்பது எழுத்து வாசகர்களுக்கு நினைவிருக்கும். ஒரு மகாகவி வெறும் நகைச்சுவைக்காக அந்த கவிதையை எழுதி இருக்கமாட்டார் என்று கூறி நான் அக்கினிக்குஞ்சு குறியீட்டியல் கவிதை என்று லேசாக விளக்கினேன். பாரதியின் பல சிறு கவிதைகளும் தேச பக்தி, புரட்சி மனப்பான்மை, சமூக சீர்திருத்தம் ஆகிய மதிப்புகளுக்கும் மேலாக ஓங்கி எழுந்து நிற்கும் அடிப்படையான, பிரபஞ்சீய (யூனிவர்சல்) மனித ஜாதிக்கு உரிய மதிப்புகளைக் கொண்ட கவி வாக்குகள், கவித்துவ படைப்புகள் என்று ஆராய்ந்து காட்டப்படுகிற போதுதான் பாரதி நமக்கு மட்டும் இல்லை, உலகத்துக்கே புரியும்.

புதுக் கவிதைகள்

இங்கிலீஷ் கருத்தரங்கில் நான் ரொம்பவும் எதிர்பார்த்து இருந்தது 'தற்கால தமிழ் கவிதையில் மேல் நாட்டு பாதிப்பு' என்ற தலைப்பில் கட்டுரை படிக்கப்பட இருந்த கருத்தரங்கு. அதை படிக்க இருந்த இலங்கையர் சி. வி. ராஜசுந்தரம் வராததால் அந்த கருத்தரங்கு நடைபெறவில்லை. புதுக் கவிதைபற்றிய கருத்தரங்கம் அது. அந்த கட்டுரையும் கிடைக்கவில்லை. ஆனால் அந்த கட்டுரையின் சுருக்கம் ஆராய்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள ஒரு புத்தகத்தில் தரப்பட்டிருக்கிறது. அதில் உள்ள குறிப்புகளிலிருந்து அவரது கட்டுரையில் தற்கால கவிதையில் மரபும் தனிப்பட்ட திறனும் எவ்வாறு காணப்படுகிறது என்றும் மேல் நாட்டு படிமவாதிகளின் செல்வாக்கு புது முறையில் கவிதை எழுதியவர்களின் கோஷ்டியில் பாதிப்பு காண்கிறது என்றும் விளக்கி பிச்சமூர்த்தி கு. ப. ராஜகோபாலன், வல்லிக் கண்ணன், புதுமைப்பித்தன், தர்மசிவராமு, வைதீஸ்வரன், முருகையன் ஆகியோரது கவிதைகளிலிருந்து மாதிரி காட்டி ஆராய்ந்திருப்பதாகத் தெரிகிறது. இந்த கட்டுரை கருத்தரங்கில் படிக்கப்பட்டு விவாதிக்க இடம் ஏற்படாமல் போனது வருத்தம்தான். போகட்டும்.

தமிழ் கருத்தரங்குகள்

இனி தமிழ் கருத்தரங்குகளுக்கு வருவோம். மொத்தம் 27 குழுக் கருத்தரங்குகளில் தற்கால இலக்கியம் சம்பந்தமாக ஐந்து கட்டுரைகள் படிக்கப்பட்டன. தமிழ் படைப்பிலக்கியத்தில் உரைநடை, தமிழ் சமூக நாவல்களின் தோற்றமும் வளர்ச்சியும், பாரதிதாசன் கவிதையில் சமுதாய சீர்திருத்தம், தமிழில் வரலாற்றுப் புதினங்கள், கடந்த கால் நூற்றுண்டு காலத்தின் தமிழ் இலக்கியப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும் ஆகியவை அவை. மற்ற இருபத்திரெண்டும் மறைந்து போன மருங்கூர்பட்டினம். ஊர்ப் பெயர்களின் உருமாற்றம், தொறு என்னும் சொல்லின் வரலாறு, ஊடல், இளங்கோ புகுத்திய புதுமை, தமிழ் சிலம்பில் இரு சுடர் போன்ற பொருள் அடங்கிய பழமை இலக்கிய ஆராய்ச்சி கட்டுரைகளும் பர்மாவில் தமிழர் சமுதாயம், கலைச் சொல்லாக்கம் தமிழ் நாட்டு சித்தர்கள்,

தமிழகமும் சித்த வைத்தியமும், பனம்பார ஞர்பாயிரம் திருப்பள்ளி எழுச்சி, சீருப் புராணம் போன்ற பல பொருள் பற்றிய கட்டுரைகள்.

படைப்பிலக்கிய நடை

தமிழ் படைப்பிலக்கியத்தில் உரைநடை என்ற தலைப்பில் அகிலன் உரைநடைக்கும் (புரோஸ்) நடைக்கும் (ஸ்டைல்) உள்ள வித்தியாசத்தை குறிப்பிட்டு வேதநாயகம் பிள்ளையின் உரைநடையை உதாரணம் காட்டி விவரமாக விளக்கினவர் வேதநாயகம் பிள்ளை யைப்போல தமிழ் படைப்பு இலக்கிய உரை நடைக்கு அதிக பங்கு செலுத்தி உள்ள ராஜம் அய்யர், மாதவையா இருவர் நடையையும் பற்றி பிரஸ்தாபித்து விட்டு விளக்காமல் 'கட்டுரை விரியும் என்று அஞ்சுகிறேன்' என்று சொல்லி நிறுத்திவிட்டார். மற்ற இருவர் நடைக்கும் அவர் சம இடம் கொடுத்திருக்க வேண்டும். அடுத்து, அவர் வேதநாயகம் பிள்ளையின் நடையில்சீர் திருத்த நோக்கம் இருப் பதாகவும் ராஜம் அய்யர் நடையில்அந்த நோக் கம் காணப்படவில்லை என்றும் குறிப்பிட்டார். நடைபற்றிய ஆராய்ச்சியில் சீர்திருத்த நோக் கம் பற்றிய கருத்து ஏன் வரவேண்டும் என்று கேட்கத் தோன்றுகிறது. படைப்பாளிக்கு நடை ஒரு சாதனம். கொள்கைபடைப்பாளிக்கு ஒரு உத்தேசம். ஒரு படைப்பாளி தன் நடை மூலம் எந்தவிதமான உத்தேசத்தையும் வெளி யிடலாம். ஆகவே கொள்கை உத்தேசத்தை வைத்து நடையை வித்யாசப்படுத்த வேண்டிய தில்லை. அப்படி அவர் வித்யாசப்படுத்தி சொல்லி இருக்கிறதை வைத்துப் பார்த்தாலும் ராஜம் அய்யர் நடையில் (சீர்திருத்த நோக்கம் இல்லாமல் இருக்கலாம். இருந்துதான் ஆக வேண்டும் என்பதும் இல்லை) தத்துவ நோக்கம் இருப்பதை பார்க்க முடிகிறதே. அதை அகிலன் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஏன், மாதவையா நடையில் வேதநாயகம் பிள்ளை யைவிட சீர்திருத்த நோக்கம் பலமாக காணப் படுகிறதே. அதையும் சொல்லி இருக்கலாமே.

பிறகு அகிலன், உரைநடை வளர்ச்சி சரித் திரத்தைதான் ஆராயப் போவதில்லை என்றும் சில தனி நடைப் போக்குகளை கூறுவதே தன் நோக்கம் என்றும் குறிப்பிட்டார். சரியானது தான். அப்படி கூறும்போது மேலே குறிப் பிட்டவர்களைத் தவிர பெஸ்கி, சாமிநாதய்யர், வ. வெ. சு. அய்யர், திரு. வி. க, கல்கி புதுமைப்பித்தன், கு ப. ராஜகோபாலன், மறைமலை அடிகள், மு. வரதராஜன் ஆகிய வர்கள் பெயரைக் குறிப்பிட்டார் அவர் குறிப் பிட்டவர்களின் நடைகளும் தனி விதமானவை தான். ஆனல் திரு. வி. க, சாமிநாதய்யர். மறைமலையடிகள் ஆகியோரது நடைகள் ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கான தனி நடைகள் என்றுதான் எனக்குப் படுகிறது. சிறுகதை, நாவல் போன்ற உணர்ச்சி வெளியீட்டு படைப் பிலக்கிய உருவங்களுக்கான தனி நடைகளாக எனக்குப் படவில்லை. அகிலன் கட்டுரை தலைப்பு 'தமிழ் படைப்பிலக்கியத்தில் உரை நடை' என்று இருப்பதால் இந்த வித்யா சத்தை காட்ட விரும்புகிறேன்.

இத்தனை தனி நடைப்போக்குகளை குறிப் பிட்ட கட்டுரையாளர், இன்று பலவிதமான படைப்புநடைகளுக்கு வகை செய்த வ. ரா வின் நடையை குறிப்பிடாததை நான் கருத்தரங்கில் எடுத்துக் காட்டியபோது அவர் ஏற்றுக் கொண்டதால் மேலே அதைப்பற்றி பேச எது வும் இல்லை. என்றாலும் இத்தனை பெயர்களை குறிப்பிட்ட அகிலன் கணிப்பில் வ. ரா நினை வுக்கே வராதது எனக்கு வியப்பாகத்தான் இருக்கிறது அதோடு மௌனி, ராமாம்ருதம் போன்ற தனிநடைப் போக்குகளையும் அவர் குறிப்பிட்டிருக்கவேண்டும் என்றுசொன்னேன் மொத்தத்தில் அவர் கட்டுரை மேலோட்டமாக இருந்தது. தமிழ் படைப்பிலக்கிய நடை வித விதமாகவளர்ந்திருக்கிறதுபலர் கையில் இந்த நடைவளர்ச்சியை நாம் இன்னும் ஆழ்ந்து ஆராயவேண்டும்

சமூக நாவல்கள்

அடுத்தபடியாக தமிழ் சமூக நாவல்களின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் ரா. தண்டாயுதம் கட்டுரை படித்தார். வர லாற்று ரீதி விமர்சன முறைப்படி அவர் ஒரு 'சர்வே' செய்தாலும் சில குறிப்பிட்ட நாவலா சிரியர்களைப் பற்றி அழுத்தியும் மற்றவர்களை 'also ran' என்கிறபடி 'காடலாக்' கொடுத்தும் கட்டுரையை ஓட்டமாக நடத்திச் சென்றுவிட்ட தால் கட்டுரை சமநிறை குறைந்து இருந்த தாக பட்டது.

பாரதிதாசன் கவிதைகளில் சமுதாய சீர் திருத்தம்' என்ற தலைப்பு கருத்தரங்கில் நான் கலந்து கொள்ள முடியவில்லை அந்த சமயத் தில் ஐராவதம் மகாதேவன் கட்டுரை விவாத விசேஷக் கூட்டத்துக்கு போய்விட்டேன்.

இலக்கிய பத்திரிகைகள்

அடுத்தாற்போல, கடந்த கால் நூற்றாண்டு காலத்தின் தமிழ் இலக்கியப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் நா. பார்த்தசாரதி கட்டுரை படித்தார். இலக் கியப் பத்திரிகைகள் கடந்த கால்நூற்றாண்டுக் காலத்துக்கு கொஞ்சம் மேற்பட்ட கால அள வில்தான் வளர்ச்சியும் வளமும் பல்வேறு வடி வமும் பெற்றிருக்கிறது என்று குறிப்பிட்டு அநேகமாக எல்லா இலக்கியப் பத்தரிகைகளை யும் சொல்லி புதுமைகளையும் சோதனை இலக் கியத் துறைகளையும் வளாக்க இந்த எடுகளின் காலத்துக்குப் பின்பே அதிக வாய்ப்புக்கிடைத்

தது என்று குறிப்பிட்டார். பின்னர் வெகுஜனப் பத்திரிகைத்துறை ஆதிக்கம் வளர்ந்து பரவி இலக்கியப் பத்திரிகைகள் பாதிக்கப்பட்டதாகவும் இருந்தும் சில இலக்கியப்பத்திரிகைகள் போராடி வருவதாகவும் இலக்கிய சோதனைகள் விவாதங்கள் திறனாய்வு இவைகளை கையாளும் இலக்கியப் பத்திரிகைகளுக்கு எதிர்காலம் இருக்கிறது என்றும் குறிப்பிட்டார். பார்த்தசாரதியின் கட்டுரை சரியாக அமைந்திருந்தது. விவாதத்துக்கு உரிய கருத்துக்கள் எதுவும் அதில் இல்லை

சரித்திர நாவல்கள்

கடைசி கட்டுரையாக படிக்கப்பட்டது தமிழில் வரலாற்றுப் புதினங்கள் என்ற தலைப்பில் கோவி மணிசேகரன் கட்டுரை. இங்கிலீஷ் கருத்தரங்கில் ஹபா கிந்த் லியோ படித்த சரித்திர நாவல் பற்றிய கட்டுரை போல் இல்லாமல் வாலாற்று நீதியாக கணித்திருந்தார். ஆனால் தமிழ்சரித்திர நாவல்களுக்கு முன்னோடியாக இருந்த வடுவூர் கே. துரைசாமி அய்யங்காரை அவர் குறிப்பிடாததைப் பற்றி நான் கேட்டதுக்கு அந்த கேள்வி தன் கட்டுரைக்கு புறம்பான விஷயம் என்று சொல்லி அவர் தட்டிக்கழித்தது சரியாகப்படவில்லை எனக்கு வடுவூராவுக்கு இடம் உண்டு. மணிசேகரன் கூறிய இன்னொரு கருத்தும் எனக்கு சரியாகப்படவில்லை அதையும் கருத்தரங்கில் கூறினேன். வேள்வித்தீ போன்ற இன்றைய நாவல்களும் பிற்காலத்தில் வரலாற்று நாவல்களாக ஆகிவிடலாம் என்றார். எப்படியோ? வரலாற்று நாவலுக்கும் சமூக நாவலுக்கும் உள்ள வித்யாசத்தை அவர் பார்க்கவில்லை என்று எனக்கு படுகிறது 'வேள்வித்தீ' ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வாழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு தனிமனித உறவுகள் பற்றியது. அதில் ஏற்பட்ட மோதலும் போராட்டமும் தனிமனிதர்களை பாதித்ததோடு நின்றுவிட்டவை. கொஞ்சம் விரித்தால் ஒரே சூழ்நிலையில் வாழும் சிலரது கூட்டு வாழ்வை பாதிப்பதோடு நின்றுவிட்டது. ஆனால் சரித்திர நாவல் அப்படியில்லை. காரண காரியங்களின் எல்லை வீச்சானது தனிகுடும்பங்கள் தனி சமூகங்கள் என்பதுக்கும் மேலாக ஒரு நாடு பற்றிய பிரச்னைகள் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகள் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் அங்கே மோதி ஏற்பட்ட களம் ஒரு சரித்திர நாவலில் உண்டு பாதிப்பு நாட்டு மக்கள் அரசவம்சம், பிரதேச ஆதிக்கம் போன்ற அம்சங்கள் சம்பந்தப்பட்டதாக இருக்கும். அரசர்கள் காலத்தை தாண்டி வந்தாலும் இதே அடிப்படையில் தான் இருக்கும். நிலைகள் சூழ்நிலைகள்தான் மாறி இருக்கும் பாகிஸ்தான் சீனா யுத்தம்வரை இந்த விவகாரம்தான்.

ஆனால் ஒரு சிறு சமூகம் பற்றிய நாவல் வரலாற்று நாவலாக மாற முடியாது சமூக நாவலின் பகைப்புலம் பிரச்னை இவைகளே வேறே. சமூக நாவலை விட குடும்பநாவல் இன்னும் குறுகிய வீச்சு கொண்டது. ஜீவனம்சம் குடும்பநாவல்'. 'பொய்த்தேவு' சமூக நாவல். குடும்பநாவலும் சமூக நாவலும் ஒன்று சேரக்கூடும் இழையக்கூடும். ஆனால் சரித்திர நாவல் இந்த இரண்டோடு சம்பந்தப்படாது.

மேலோட்டமான எழுத்துக்களே

ஆக, இரண்டாவது உலகத் தமிழ் கருத்தரங்கு மகாநாட்டில் நடைபெற்ற இலக்கிய கருத்தரங்குகளை கவனித்ததில் எனக்குத் தோன்றிய சில கருத்துக்களைச் சொல்லி இருக்கிறேன். கட்டுரைகள் எழுத்து வடிவில் கிடைக்கக் கூடுமானால் விவரமாக ஆராயஇடம் இருக்கும். அது ஒரு பக்கம் இருக்க, இந்த கருத்தரங்கு கட்டுரைகள் தரம் பற்றி பொதுவாக பார்க்கிறபோது தோன்றுவதென்ன? தமிழில் இலக்கிய விமர்சனம் பற்றி மேடைகளிலும் கட்டுரைகளிலும் என்ன பேசுகிறார்கள் எழுதுகிறார்கள் என்பது தெரியும். சமீபத்தில் கோயமுத்தூரிலிருந்து வரும் 'தேனி' என்ற கவிதைப் பத்திரிகையில்கூட ஒருவர் 'தமிழில் தரமான விமர்சகர்கள் இல்லை. விமர்சன நூல்கள் இல்லை. இக்கருத்தை வெளியிடுகிற நான் க. நா. சு., சி. சு. செ. இருவரையும் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் சொல்கிறேன் அவர்களது பத்திரிகைகளையும் மறந்துவிடவில்லை. இவ்விருவரும் நடுநிலையற்ற ஒருவித காழ்ப்புணர்ச்சி நிறைந்த விரக்தி கலந்த விமர்சனக் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள்' என்றெல்லாம் நாமவாளி பாடி ஒரு பக்கத்துக்கு எழுதி இருக்கிறார். சரி, இருக்கட்டும். க. நா. சு.வும். சி. சு. செ.யும் அப்படியே எழுதித் தொலைத்துக்கொண்டு போகட்டும். நாய்க்கு கெட்ட பெயர் இட்டு தூக்கில் போட்டுவிடுவோம். இப்போது இந்த கருத்தரங்குகளில் தங்கள் கருத்துக்களை வெளியிட தக்க வாய்ப்பு கிடைத்ததே, மு. வ, அகிலன், விஸ்வநாதன், கோவி மணிசேகரன் மற்றவர்கள் எப்படி வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று ஒருவருக்கு கேட்கத் தோன்றுமல்லவா? பொதுவாகப் பார்த்தால் ஆழ்ந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளாக அவை அமையவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். 'காழ்ப்புணர்ச்சி,' 'விரக்தி மனப்பான்மை,' 'நடுநிலையற்றவர்கள்,' 'வேண்டியவர்களை புகழ்பவர்கள்,' 'வேண்டாதவர்களை இகழ்பவர்கள்' என்றெல்லாம் எங்கள் மீது எறியப்படுவதை நான் இவர்கள் மீது எறிய முற்படமாட்டேன். அது அநாகரீகமானதாகும். நான் சொல்வதெல்லாம் இதுதான், எழுத்தாளர்களும் சரி, பேராசிரியர்களும் சரி, தற்கால இலக்கியத்தை, அதன் பிரிவுகளை மதிப்பிட எந்தவிதமான ஒரு முறையையும் பின்பற்றவில்லை, தனித்த பார்வையும் கொள்ளவில்லை, ஆழ்ந்து படைப்புகளை படித்து அதன் தனிச் சிறப்பு குணங்களை உணரச் செய்யும்படியான விமர்சன அளவுகோல்களை அந்த

படைப்புகள் பக்கம் கொண்டு போகவுமில்லை என்பதுதான். ஒரு 'சென்டிமெண்டல்' அணுகுதல்தான் தெரிகிறது. ஆதாரம் காட்டி விவகாரமான ஆராய்வு காணப்படவில்லை. க. நா. சு.வையும். சி. சு. செ.யையும் மறந்துவிட்டு இந்த கட்டுரைகளை படிக்கிறவர்களும் என்ன சொல்வார்கள் என்றுதான் நான் எனக்குள் கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் மீதும் பெயர்ப்பட்டியல் சம்பந்தமாக கணைகளை மற்றவர்கள் வீசக்கூடும். (ஆல்வேயில் நடந்த அகில இந்திய எழுத்தாளர் மகாநாட்டு தமிழ் பிரதிதிகள் அன்று எங்கள் கட்டுரைகளைப் பற்றி பேசினமாதிரி) இதெல்லாம் சொல்ல வேண்டியதில்லைதான். ஆனல் விமர்சனத்தை ஆராயாமல் விமர்சகர்களை தாக்குகிற மனப்பான்மையை எழுத்தாளர் முதல் பேராசிரிய புலவர்கள் வரை கொண்டிருக்கிற நிலையில் தமிழில் தரமான விமர்சனம் எப்படி வளர முடியும் என்று எனககும்தான் கேட்கத் தோன்றுகிறது. எழுத்தாளர்களும் பேராசிரியர்களும் மற்ற துறைகளைப்போல விமர்சனமும் ஒரு தனித்துறை என நினைத்து, அந்த துறைக்கு ஏற்ப தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள முற்படவேண்டும் என்பதுதான் நம் முன் இருப்பது.

புதிய ஆபத்துக்கள்

நம்மிடையே விமர்சனத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களைப் பற்றி பேசும்போது எனக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் ஒரு புதிய நிலமையை, புதிய ஆபத்தைப் பற்றி நினைக்கத் தோன்றுகிறது. அதாவது தமிழை தாய்மொழியாக கொள்ளாமல் மொழியியல் ரீதியாக தமிழ் ஆராய்ச்சி செய்ய தமிழ் கற்று தமிழ் இலக்கிய விமர்சனம் செய்ய முற்படுகிறவர்களிடமிருந்து ஏற்படக்கூடிய ஆபத்தைத்தான் சொல்கிறேன. இந்த மகாநாட்டில் அப்படிப்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள். வெளிநாட்டார் நம் தமிழை கற்றுக்கொண்டு நம் மொழி, இலக்கியம் பற்றி அறிந்துகொள்வதை பார்க்க நமக்கு மகிழ்ச்சிதான். விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சி முறைகளை கையாண்டு இலக்கிய காலம் சரித்திரம் சம்பந்தமாக முடிவுகள் செய்ய முற்படுவதும் நாம் வரவேற்கத் தக்கதுதான். ஆனல் திடீரென ஒரு நாள் காலை நமது இலக்கியத்தை விமர்சனம் செய்ய முற்படும்போதுதான், அவர்கள் சொன்ன கருத்துக்களை கேட்கும்போது கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாக இருக்கிறதே என்று தோன்றுகிறது.

சமீபகாலத்தில் தமிழ் படித்து தமிழ் மொழி ஆராய்ச்சி ஈடுபட்ட இரண்டு 'முக்கியமானவர்கள் செகோஸ்லேவியாவை சேர்ந்த கமில் ஸ்வெலபில் என்பவரும் இங்கிலாந்தை சேர்ந்த ஆஷர் என்பவரும். இருவரும் தம் ஊர்களில் தம் தம் நாட்டு சர்வகலாலையில் பேராசிரியர்களாக இருப்பவர்கள். இந்த மகாநரட்டை நடத்தியவர்களே அவர்கள்தான் என்பது போல பட்டது. அவர்கள் மகாநாட்டில் பணியாற்றியதை பார்த்தபோது, முதலில் கமில் ஸ்வெலபில்லை எடுத்துக்கொள்வோம். மகாநாடு முடிந்து நன்றி தெரிவிப்புக் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது கூட்டம் முடியும் சமயம் 'தமிழ் இலக்கிய அறிமுகம்' (Introducing Tamil literature) என்ற ஒரு அச்சிட்ட கட்டுரையை விநியோகித்தார். அதில் சில கருத்துக்களை சரியாகச் சொல்லி இருக்கிறர். சில கசப்பான உண்மைகளைச் சொல்லி இருக்கிறர். அவைகள் நமக்கு இனிப்பாக இல்லாவிட்டாலும் விருப்புவெறுப்பு இல்லாத ஒருவர் சொன்ன கருத்துக்களாக அவைகளை நினைத்து நாம் சிந்திக்க வேண்டியவைகள். ஆனல் சிலதை தவருக மதிப்பிட்டும் இருக்கிறர்.

தவருன கருத்துக்கள்

பாரதிக்குப் பின் தமிழ்நாடு அவரைவிட உயர்ந்த கவியை அளிக்கவில்லை; இரண்டு உலக யுத்தங்களுக்கு நடுவில் புதுமைப்பித்தன், பாரதிதாசன், திரு. வி. க. ஆகிய குறைந்தது மூன்று பெரிய பேர்களை தமிழகம் தந்திருக்கிறது, முப்பதுக்கள் கால மணிக்கொடி மலர்ச்சி கோஷ்டியில் தலைசிறந்தவர் புதுமைப்பித்தன் தான், கு. பா. ராஜகோபாலன், பிச்சமூர்த்தி இருவரும் புதிய கவிதை வடிவ சோதனை செய்தார்கள் என்ருலும் இருவரும் இது கதாசிரியர்களாகத்தான் சாதனை காட்டினர்கள், தற்கால தமிழ் இலக்கிய உலகில் விசனகரமான அம்சங்களில் ஒன்று விமர்சனம் என்று செரல்லும்படியாக எதுவும் அநேகமாக இல்லாததுதான், (விதிவிலக்காக க நா. சுப்ரமண்யம் இங்கும் அங்குமாக வெளியாகும் தமிழ் நாவல்களை மனப்பூர்வமாக தாக்கி இருப்பதைத் தவிர), தமிழில் நாடகத்துறை சோதனையே கிடையாது, ஆகிய அவரது கருத்துக்களை படிக்கிற போது அவர் தற்கால தமிழ் இலக்கிய படைப்புகளை படித்து விட்டுச் சொல்கிறரா இல்லை பிறர் சொல்வதைக் கேட்டுச் சொல்கிருரா என்ற சந்தேகம் தோன்றுகிறது.

வ. ரா.வைப் பற்றி அவர் கட்டுரையில் பிரஸ்தாபமே இல்லை ஆமாம், மு வ. அகிலன், கட்டுரைகளிலேயே காணப்படாதபோது இவர் கட்டுரையில் எப்படி இருக்கும்? இ, எஸ். விஸ்வநாதன் புதுமைப்பித்தனுக்கு சமமாக யாரும் இல்லை என்பதுபோல இவரும் மணிக்கொடி கோஷ்டியில் புதுமைப்பித்தன்தான் தலைசிறந்தவர் என்கிருர். ந. பிச்சமூர்த்தி கவிதையில் சாதனை காட்டவில்லை என்கிருர். க. நா. சு,வின் புத்தக மதிப்புரைகளை மட்டும் படித்து விட்டு அவரைப் பற்றி அபிப்ராயம் சொல்கிருர். வ. வே. சு. பற்றி பிரஸ்தாபம் இல்லை, சிறுகதையில் ராமையாவை அவர் குறிப்பிடவே இல்லை. பேர்கள் சொல்லாததுக்காக நான் இங்கே குறை காணவில்லை. தற்கால

தமிழ் இலக்கியம் பற்றி இந்த பெயர்கள் இல்லாமல் ஒரு அறிமுகம் இருக்கக்கூடுமா, என்பதுதான் என் கேள்வி. இலக்கிய சரித்திரம் தவறாக இருந்துவிடக் கூடாது. இலக்கிய விமர்சனம் ஒரு முறையை சார்ந்து இருக்கலாம். அதனால் சிலதை கண்டித்தோ, ஒதுக்கியோ, புறக்கணித்தோ இருக்கலாம். இங்கே ஸ்வெலபில் இலக்கிய சரித்திரத்தையும் இலக்கிய அபிப்ராயத்தையும் (அவர் விமர்சனம் செய்யவில்லை) கலந்து குழப்பி ஒரு கட்டுரை அமைத்திருக்கிறார். அவர் சரியாகச் சொல்லி இருக்கும் கருத்துக்களை ஏற்றுக்கொள்கிற இடத்திலும் நமக்கு அவரைப் பற்றி சந்தேகமே தோன்றுகிறது. உதாரணமாக—

படைப்பும் நேரடி உறவும்

வெகு சமீபத்திய தமிழ் கவிதை ஒரு புதிய எழுச்சி பெற்றிருக்கிறதாகவும் தமிழ் கவிகளும் ஒன்றிரு சிறுகதை ஆசிரியர்களும் அந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் யேட்ஸ், எலியட் போன்றவர்கள் தமிழ் எழுத்தாளர்களுக்கு அன்னியமானவர்கள் அல்ல என்றும் 'சர்ரியலிஸ்டிக்' போக்கு தரும சிவராமு கவிதைகளிலும், வேணுகோபாலன், வைத்தீஸ்வரன் கவிதைகளில் 'சிம்பாலிக்' சாயும் காண்பதாகவும் முருகையனுக்கு எலியட் பாதிப்பு இருப்பதாகவும் கூறுகிறார். புதுக் கவிதைக்காரர்களைப் பற்றி ஸ்வெலபில் எழுதிய பாராவை படித்தபோது எனக்கு ரொம்ப வியப்பாக இருந்தது, தமிழ் நாட்டிலேயே பலருக்கு இந்த பெயர்களே தெரியாதே. இவருக்கு எப்படி இவ்வளவு விவரம் தெரிந்தது என்று ஆச்சரியப்பட்டேன். ஆனால் அந்த வியப்பு சீக்கிரமே மறைந்துவிட்டது. புதுக் கவிதை பற்றிய ராஜசுந்தரத்தின் கட்டுரை பற்றி நான் முன்பு குறிப்பிட்டேனே அந்த கட்டுரையில் அவர் குறிப்பிட்டிருந்த பெயர்களே ஸ்வெலபில் கட்டுரையிலும் காணப்படுகின்றன. (முருகையன் உள்பட) எனவே, ராஜசுந்தரம் கட்டுரையை ஆதாரமாகக் கொண்டுதான் ஸ்வெலபில தன் கருத்தை உருவாக்கி இருப்பாரோ என்று தோன்றுகிறது. ராஜசுந்தரம் கட்டுரை சுருக்கத்தில் புதுக் கவிதை முயற்சியில் பிச்சமூர்த்திக்கு அடுத்தபடியாக சாதனைகாட்டியுள்ள தனிச்சிறப்புக் கொண்ட சி. மணி பற்றி பற்றி பிரஸ்தாபம் இல்லை. ஸ்வெலபில் கட்டுரையிலும் பிரஸ்தாபம் இல்லை. புதுக்கவிதை முயற்சிகளுடன் ஸ்வெலபில்லுக்கு நேரடியாக தொடர்பு இருந்திருந்தால் நிச்சயம் அவர் சி. மணியை குறிப்பிட்டிருப்பார். ராஜசுந்தரம் பட்டியலை அவர் அப்படியே தந்துவிட்டதையும், எழுத்து பத்திரிகை வருவது தனக்கு தெரியாது என்று அவர் சொல்லியதையும் கொண்டு பார்க்கிறபோது ஸ்வெலபில் படைப்போடு நேர் அறிமுகம் இல்லாமல், கூறப்பட்ட மற்றவர் கருத்தையே சொல்லி இருப்பதாக படுகிறது. இதுமாதிரியே மற்றவைகளும் இருக்குமோ என்று கூட தோன்றுகிறது. ஸ்வெலபில்தான் இந்த சந்தேகத்தை தெளிவிக்கவேண்டும்.

சத்தான கருத்துக்கள்

ஸ்வெலபில் கூறியுள்ள சத்தான முடிவுகள் சிலதை சொல்லாமல் இருந்தால் அவருக்கு நியாயம் செய்ததாகாது. புதுமை தமிழ் இலக்கியத்தில் சிறுகதையும் கட்டுரையும்தான் முக்கியமாக இருக்கிறது, தற்கால நாடகம், நாவல் ஆகிய துறைகளில், வங்காளி, மலையாளம், மராத்திபோல வளர்ச்சி இல்லை, சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக தமிழ் இலக்கியத்தில் - கேரளம், வங்காளம் இவைகளோடு ஒப்பிடும்போது - ஒரு தேக்கம், ஏன் பின்னோக்கிப்போவது கூட காண்கிறது என்றும் அதுக்கு காரணம் படித்தவர்கள் தொகை குறைவாக இருப்பது, தனிப்பட்டவர்கள் புத்தகம் வாங்கிப் படிக்கும் பழக்கம் இல்லாமல் இருப்பது, ஜனங்கள் பத்திரிகைகளுக்காக எழுத வேண்டிய அவசியம், அதனால் ஏற்படும் மட்டமான படைப்பு, பழமையையே திரும்பத் திரும்ப சொல்லி பெருமைப்பட்டுக் கொண்டிருப்பது, மறைமலை அடிகள், சோமசுந்தர பாரதி. பாரதிதாசன் போன்றவர்கள் ஆரம்பித்துவைத்த போக்குகள் உண்மையான சுதந்திர படைப்புத் திறனுக்கு பாதகமாக இருந்தது என்ற கருத்துககளை சொல்லி இருக்கிறார். நாம் சிந்திக்க வேண்டியவைதான். ஸ்வெலபில் தன் கருத்துக்களை இப்படி சொல்லி நிறுத்தியது சரியல்ல. விளக்கி ஆகவேண்டும். தான் படித்ததை காட்டிக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவர் கருத்துகளுடன் உடன்பாடு உள்ளவர்களுக்கும் சரி மாறுபாடு கொண்டவர்களுக்கும் சரி புதிராகவே இருக்கும். அவர் எதிர்பார்ப்பதுக்கு மாறான ஒரு பலனைக்கூட விளைவிக்கக்கூடும்.

ஆஷரின் பல்கலைக்கழக சொற்பொழிவு

அடுத்தபடியாக ஆர். இ. ஆஷர் என்கிற இங்கிலீஷ்காரர், தமிழ், மலையாள மொழி பற்றிய மொழியியல் பேராசிரியர், சேதுப்பிள்ளை நினைவுச் சொற்பொழிவாக பல்கலைக்கழகம் ஆதரவில் 'தமிழ் உரைநடை பற்றி பேசிய சொற்பொழிவு, முதல் நாள் பேச்சை நான் கேட்கவில்லை. அன்று பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை உரைநடை பற்றி பேசி இருக்கிறார். மறுநாள் அவர் பேச்சில் மறைமலை அடிகள், திரு. வி. க, கல்கி, புதுமைப்பித்தன், சம்பந்த முதலியார், சேதுப்பிள்ளை, பாரதி ஆகியோர் நடைகளை உதாரணம் காட்டி உரை நடை வளம் பற்றி பேசினார். அவரும் வ. ரா.வின் நடையைப் பற்றி குறிப்பிடவே இல்லை. டி. கே. சிதம்பரநாத முதலியார், வையாபுரிப் பிள்ளை, டி எஸ் சொக்கலிங்கம், சங்கு சுப்ரமண்யன் நடைகளையும் குறிப்பிட வில்லை. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சொல்லிவைத்தமாதிரி யாரும் வ. ரா. பெயரை

எந்த சந்தர்ப்பத்திலும் குறிப்பிடவில்லையே. ஒருவேளை நாம்தான் வ. ரா.வைப் பற்றி பெரிதாக நினைத்துக் கொண்டிருக்கிறோமோ, உண்மையில் அவர் அந்த தகுதி உள்ளவர் இல்லையோ என்றுகூட ஒருகணம் நினைத்து விட்டேன். நான் ஆஷரை சந்தித்தபோது தலைசிறந்த உரைநடைக்காரரை அவர் குறிப்பிடவில்லையே என்று கேட்டபோது தனக்கு போதுமான தகவல்கள் கிடைக்கவில்லை என்றும் கிடைத்ததை வைத்துத்தான் பார்த்ததாகவும் ஒப்புக்கொண்டார். அவரை குற்றம் சொல்வதற்கில்லை என்றாலும் அப்படி இருக்க விமர்சனம் செய்ய ஏன் இவ்வளவு அவசரப்பட வேண்டும் ஒரு அன்னிய மொழிக்காரர், என்று தான் கேட்கத் தோன்றுகிறது.

இந்த மொழியியல்காரர்கள்!

இதிலிருந்தெல்லாம் எனக்கு இதுதான் தோன்றுகிறது. மொழியியல் நிபுணர்களாக வரும் இவர்கள் பல்கலைக்கழக பேராசிரிய சுற்று வட்டத்திலேயே பழகி, அவர்கள் கருத்துக்களை கேட்டு அதன்படி சில நூல்களை படித்து தங்கள் முடிவுகளை செய்து கொண்டு பிறகு அவைகளை வெளியிடுவதில் திருப்தி அடைந்து விடுவதாகத் தெரிகிறது. தமிழ் படைப்பாளிகளுடனே, பேராசிரிய சூழ்நிலைக்கு வெளியே உள்ள இலக்கிய கருத்துக்களோடோ உறவு கொள்ளும் வாய்ப்பு எப்படியோ அவர்களுக்கு இல்லாமல் போய் விடுகிறது. அதுக்கு அவர்களே காரணமோ அல்லது பல்கலைக்கழக சூழ்நிலை காரணமோ எதுவும் இருக்கலாம். ஆனால் ஒன்று மட்டும் முடிவாக இவர்கள் இலக்கிய விமர்சனம் செய்வது - அவர்களது தற்போதைய தமிழ் இலக்கியம் பற்றிய சேமிப்பு அறிவைக் கொண்டு பார்த்தால் - அவர்களால் நியாயம் செய்ய முடியாது என்பதை காட்டுகிறது. ஆனா, வெள்ளைக்காரர்கள் நம் தமிழ் மொழியை பேசுகிறார்களே என்று அகமகிழ்ந்து போய் கரகோஷம் செய்பவர்களுக்கு இந்த எச்சரிக்கை தேவை. தமிழ் ஏதோ ரொம்ப பழமையான மொழியாக இருப்பதாக சொல்லப்படுகிறதே. நாம் அதைப்பற்றி மொழியியல் ரீதியாக தெரிந்து கொள்வோம் என்று வருகிறவர்கள் இந்த மாணவர்கள். இவர்கள் தமிழை முழுக்க கற்று பண்டைய இலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரை படித்து ரசித்து அநுபவித்து இந்த இலக்கியங்கள் சம்பந்தமாக பகைப்புலம், சூழ்நிலை இரண்டையும் அறிந்து நம் இலக்கிய வாழ்க்கை மரபுகளை மனதில் வாங்கி, வெளி இலக்கிய மரபுகளையும் வாழ்க்கை மரபுகளையும் அறிந்த நிலையில் ஒப்புநோக்கு செய்து நம் படைப்புகளை அவர்கள் மதிப்பீடு செய்ய முன் வருகிறபோதுதான் அவர்கள் கருத்து உருவாகி இருக்கும், உருப்படியாகவும் இருக்கும். உதவுவதாகவும் இருக்கும். இது இல்லாமல் நம் கூட்டங்களில், அவர்கள் உடைந்த தமிழில் நமக்கு உச்சி குளிரும்படியாக தமிழைப்பற்றி அதன் தொன்மையை புகழ்ந்து பேசுவதைக் கொண்டு, அவர்களிடம் மனம் பறிகொடுத்து விட்டால் பிறகு, அவர்கள் போதிய விமர்சனப் பார்வை இல்லாமல் இம் மாதிரி தவறான கருத்துக்களை நம்மிடையே மட்டுமின்றி வெளி நாடுகளிலும் பரப்புகிற நிலை ஏற்பட்டுவிடுகிறபோது நாம் வருத்தப்பட வேண்டி இருக்கும். க. நா. சுப்ரமண்யம் தமிழ் இலக்கியம் பற்றி இங்கிலீஷில் இங்கும் வெளியேயும் கட்டுரைகள் எழுதி வருகிறார். அவர் கருத்துக்களை ஏற்காதவர்கள் தமிழ் இலக்கியத்தை தவறாக புரிந்துகொள்ளச் செய்யும் அவர் கட்டுரைகள் என்று அவரை தாக்கி வருகிறார்கள். ஆனால் தாங்கள் இங்கிலீஷில் அவரை மறுத்து எழுதத் துணியமாட்டார்கள். திட்டுவதோடு சரி க. நா. சு. நம்மவர் திட்ட உரிமையுண்டு! ஆனால் இப்போது ஸ்வெலபில், ஆஷர் ஆகியோர் (போகப் போக பலர் சேரக்கூடும்) இம்மாதிரி கருத்துக்களை உருவாக்கிக் கொண்டு போவதை சரியென்று நினைக்கிறார்களா இந்த பேராசிரிய புலவர்கள்? க. நா. சு. சில அடிப்படைகளை வைத்து மதிப்பிடுவது தெரிகிறது இவர்களுக்கு அப்படி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லையே.

பல்கலைக் கழகங்களே!

இந்தமாதிரி எல்லாம் ஏற்படக் காரணம் நமது பல்கலைக்கழகங்களில் இலக்கியத் திறனாய்வுக்கு இடம் கொடுக்கப்படாததுதான். சமீபத்தில் ஒரு துறையாக வளர்ந்திருக்கும் மொழியியலுக்கு நம் தமிழக சர்வகலாசாலைகளில் கொடுக்கப்பட்டிருக்கும் முக்யத்துவம், காட்டப்படும் அக்கறை விமர்சனம் பற்றி இல்லவே இல்லை. நம் கலாசாலையிலிருந்து வெளிவரும் நம் இலக்கிய மாணவர்களுக்கே விமர்சன அறிவு ஏற்படும் வாய்ப்பு இல்லாத நிலையில், ஒன்றிரண்டு ஆண்டுகள் இந்தியா வந்து ஏதோ தெரிந்துகொள்ள முற்படும் வெளியாருக்கு தக்க விமர்சன அறிவு ஏற்பட எப்படி சாத்யமாகும்? முதன்மையாக படைப்பாளர்களாக இருக்கும் க. நா. சு. சி. சு. செ. போன்றவர்கள் ஏதோ தாங்கள் படித்ததை வைத்து அந்த அளவுக்கு ரசித்ததை வெளியிடுகிறார்களே தவிர தடியெடுத்த தண்டல்காரராக இவர்கள் சீறுகிற அளவுக்கு மார்தட்டி வரவில்லை என்பதை இந்த சீறுகிறவர்கள் முதலில் உணரவேண்டும். கலாசாலைகளில் இலக்கிய மாணவர்கள் பெருகினால் மட்டும் போதாது. ரசனைசக்தி வளரும்படியாக அவர்களுக்கு படிப்புமுறை இருக்கவேண்டும். விமர்சன அறிவு வளரச்செய்ய தக்க அளவுகோல்களை அவர்கள் அறியச் செய்ய வேண்டும் இதெல்லாம் தெரிந்து செய்கிறவர்கள் வரும்போது தான் தமிழில் விமர்சனம் வளரும். இதை எல்லாம் செய்யாமல் வெறும் தூற்றுதலைக் கொண்டோ புகழ்மாலை போட்டோ இலக்கியத் துறையை வளர்க்க முடியாது. இதெல்லாம்

செய்யாவிட்டால் கால்ட்வெல்லும் போப்பும் அன்று நம்மை நடத்திச் சென்றமாதிரி இன்று ஸ்வெலபில்களும் ஆஷர்களும்தான் நம் மூக்கைப் பிடித்துச் செல்கிற நிலை ஏற்படும் இது விரும்பத்தக்கதா என்று தமிழ் அறிஞர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏனென்றால் இப்போது சின்ன ஆபத்தாக ஆரம்பித்திருப்பது பெரிசாக வளரக்கூடும். ஆஷர் பேசிய போது மு. வரதராஜன், ஆஷர் போன்றவர்கள் நமக்கு வெளியே இருந்து பாரபட்சமின்றி நடுநோக்குடன் சொல்லும் கருத்துக்கள்பற்றி சிந்திக்க வேண்டும் என்று சொன்னது சரியே அதே சமயம் அவர்கள் தவறாகப் போவதையும் நாம் எடுத்துக்காட்டியாக வேண்டும். இந்த மாதிரி சொற்பொழிவுகளை, கருத்தரங்கங்களை நடத்தும் பல்கலைக்கழகம்தான் அதுக்கான வழி வகைகளை கையாள வேண்டும். தும்பை விட்டு விட்டு பிறகு வாலைப் பிடிக்கிற கதையாக ஆகிவிடக்கூடாது. இதெல்லாம் செய்யுமா நம் பல்கலைக்கழகங்கள்?

புலவர்கள் கவனத்துக்கு

இரண்டாவது உலகத் தமிழ் கருத்தரங்கு—மகாநாடு நிகழ்ச்சிகள் தூண்டிய சில கருத்துக்களை சொல்லி இருக்கிறேன். முடிக்குமுன் இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். பல்கலைக்கழக கட்டிடத்தில் நடந்த கருத்தரங்குகளில் ஈடுபட்ட நான் பூம்புகார் கருத்தரங்கு பக்கம் போகவே இல்லை. ரேடியோவில் கேட்ட அந்த கருத்தரங்க சொற்பொழிவுகளை சுருக்கங்களை கேட்டதைக் கொண்டு பார்த்தால் பொது மக்களுக்கு ஏற்ப பேசப்பட்ட கூட்டங்களாகவே பெரும்பாலும் இருந்திருக்கிறது. தமிழ் உணர்ச்சி, தமிழ்ப் பெருமை தூக்கி இருந்ததை பார்க்க முடிந்தது. இந்த கூட்ட நடவடிக்கைகள் பற்றி பத்திரிகைகளில் வந்த செய்தியில் பின் வரும் பாராவைப் படித்தேன்.

> ''கவிதை எழுத வருமா என்று நீங்கள் எண்ணலாம். எழுதவரும். பத்து நாட்களாகப் பெற்ற தூய உணர்ச்சியால் கவிதை எழுதவரும். அது கவிதையல்ல என்று புலவர்கள் சொல்வார்கள். ஆனால் நாங்கள் சொல்லமாட்டோம். புலவர்கள் இலக்கணத்தை மட்டும் கவனிப்பார்கள். நாங்கள் அடிப்படையில் உள்ள உணர்ச்சியைத்தான் கவனிப்போம் கவிதை என்பது சந்தமும் இலக்கணமும் மட்டும் அல்ல. இவைகளுக்கெல்லாம் மேலாக தூய்மையும் திறமையும் ஒருங்கிணைந்திருக்கவேண்டும்.''

இந்த கருத்தை வெளியிட்டவர் யாரோ புதுக் கவிதை ஆதரவாளர் என்று வாசகர்கள் நினைக்கமாட்டீர்களே. இதை சொன்னது தமிழக முதல் அமைச்சர் திரு. சி.என். அண்ணாதுரை. இந்த வரிகளில் அவர் கவிதைபற்றிய வியாக்யானத்தை சரியாகக் கொடுத்திருக்கிறார். இந்த கருத்தை நம் பேராசிரிய, புலவர்கள் கவனத்துக்கு சிபார்சு செய்ய விரும்புகிறேன். மேலே விளக்கம் எதுவும் தேவையில்லை.

எழுத்தாளருக்கு இடமில்லை

உலகத் தமிழ் அறிஞர்கள் மகாநாட்டிலே மொழி ஆராய்ச்சியும் சொல் ஆராய்ச்சியும் தான் மேலோங்கி இருந்தது. சோமு, 'கல்கி' கட்டுரையில் விவரமாகக் கூறி இருப்பதுபோல இலக்கியத்தை மறந்துவிட்டு மொழி ஆராய்ச்சியிலேயே மூழ்கிவிட்டமாதிரி இருந்தது. மொழியும் இலக்கியமும் சம பங்காவது இடம் பெற்றிருக்க வேண்டும். இலக்கியம் குறைவாகவே இருந்திருக்கிறது. இலக்கியத்திலும் பழைய இலக்கியங்கள்பற்றிதான் பேச்சு அதிகம் புதுமை இலக்கியம்பற்றி ரொம்ப குறைச்சல். அதிலும் சமபங்கு இருந்திருக்க வேண்டும். ஐ.ஏ.டி.ஆர் என்கிற, (இண்டர் நேஷனல் அசோசியேஷன் ஆப் தமிழ் ரிசெர்ச்) இந்த மகாநாட்டை நடத்தும் அமைப்பு எத்தன்மையதோ? பேராசிரிய புலவர்களுக்கு, ஆராய்ச்சியாளர்களுக்குத்தான் அதில் இடம் இருக்கும் போல் தெரிகிறது. எழுத்தாளர்களுக்கு இடம் கிடையாதுபோல் இருக்கிறது. வெளிநாட்டிலிருந்து வந்தவர்களில் எழுத்தாளர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் இருந்ததாகத் தெரியவில்லை. உள் நாட்டில் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டவர்களிலும் எழுத்தாளர்கள் அபூர்வமாகத்தான் இருந்தார்கள். அமைப்பு பேராசிரியர்களுக்கும் புலவர்களுக்கும்தான் முதன்மையாக என்று இருந்துவிட்டால் எழுத்தாளர்கள்

நெருப்புக் குச்சி

நீல. பத்மநாபன்

உருண்ட முனையில்
கந்தகச்செழுமை,
குருதிச்செம்மை

பரந்த பரப்பில்
ரஸாயனக் கலவை
சிமிழின் சீற்றம்.

அழுந்தி ஆழ்கையில்
அழிக்கும் செந்தீ,
ஆக்கும் வெண்தீ.

எரிந்து அடங்கையில்
புகை இழை...கரித்துகள்கள்,
நூலிழை...உயிர் லக்ஷங்கள்.

தங்களுக்கு அதில் பங்கு இல்லை என்று குறைப்பட காரணம் இல்லை. எழுத்தாளர்கள் தாங்கள் பங்கு கொள்ளத்தக்க வேறு அமைப்பை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். தாங்கள் விரும்பியவிதம் இலக்கியக் கருத்துக்களை வெளியிட்டு பரிமாறிக் கொள்ள வேண்டும்.

த. எ. சங்கத்தின் கடமை

ஆனால் தமிழ் எழுத்தாளர்கள் உடனே புது அமைப்பை அமைத்துக்கொள்ள வேண்டிய அவசரம் இல்லை. தமிழ் எழுத்தாளர் சங்கம் ஏற்கெனவே பதினைந்து ஆண்டுகளாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எப்படி நம் பல்கலைக்கழகங்கள் ரசனை விமர்சனம் சம்பந்தமாக தம் கடமையை செய்யவில்லையோ அதே போல் படைப்பு சம்பந்தமாக த. எ. சங்கம் தன் கடமையை செய்ய முற்படவே இல்லை. அப்படி கடமை இருப்பதாக பிரக்ஞையே இல்லாமல்தான் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஒரு இரண்டு மூன்று ஆண்டுகளில் ஐ.ஏ.டி. ஆர் சாதித்ததில் ஒரு சிறு பகுதியைக்கூட இந்த பதினைந்து ஆண்டுகளில் த. எ. சங்கம் சாதிக்கவில்லை. இலக்கியம் சம்பந்தமாக த.எ. சங்கம் தக்க வழிமுறைகளை இந்த பதினைந்து ஆண்டுகளில் கடைப்பிடித்திருந்தால் இன்று தற்கால தமிழ் இலக்கியம் உலக மொழி பலதுக்கும் அறிமுகமாகி இருக்கலாம். இனியும் த.எ சங்கம் தன்னை புதுசுபடுத்திக்கொள்ளாமல் செக்கு மாடாக சுற்றிக் கொண்டிருந்தால் கமில் ஸ்வெலபில்லும் ஆஷரும்தான் நமக்கு விமர்சகர்களாக உலகம் சுற்றுவார்கள். க நா. சு. நமக்கு ஆபத்தானவர் இல்லை. இவர்கள் போன்றவர்கள்தான் இருப்பார்கள். எனவே தமிழ் எழுத்தாளர்களும் த.எ. சங்கமும் விழித்துக்கொள்ள வேண்டும். அவரவர் விமர்சனப் பார்வையை அவரவருக்கு உரிமை கொடுத்துவிட்டு விவாதிக்க வேண்டும். நோக்குமுறை உருவாக்கிக் கொள்ள வேண்டும். பேராசிரியர்கள் நம்மைச் சரியாக விமர்சிக்க வரும்வரை காத்திருக்காமல், அதே சமயம் விமர்சனத்துக்கும் நம்மைத் தகுதிபடுத்திக்கொண்டு களத்தில் இறங்கிததான் ஆகவேண்டும் எழுத்தாளர்கள். க.நா.சு. வெகுகாலமாக தனியாக ஊதிவரும் விமர்சன சங்கொலியோடு கோஷ்டி சங்கொலி சேரவேண்டும். அப்போது பேராசிரியர்களும் நம்மோடு சேர்வார்கள், தம் முறையை மாற்றிக் கொண்டு. இதுக்கு த. எ. சங்கம் கங்கணம்கட்டிக்கொண்டு செயல்பட வேண்டும். ஐ. ஏ. டி. ஆர்க்கு மேலாக அது செயல்பட முடியும், சாதிக்க முடியும் என்பதை எழுத்தாளர்கள் உணர்ந்து — இலக்கிய கருத்துக்கள் எப்படி இருந்தாலும் சரி— அமைப்பில் இருந்து கலந்து உரையாடி கருத்து பரிமாறல் செய்து தமிழ் இலக்கியத்தை வளமுள்ளதாக ஆக்க, ரசனையை பெருக்க தங்கள் பங்கைச் செலுத்தி ஈடுபட வேண்டும் என்ற வேண்டுகோளுடன் என் கட்டுரையை முடிக்கிறேன்.

செத்த புல்

இரா. மீனாட்சி

செத்த புல்லே!
சின்ன வேலிபோல்
துண்டு துண்டாய்க்
கட்டுண்டு கிடக்கின்றாய்
நூலோடு பிணித்துன்னைப்
பத்தமடைப் பாயென்றார்
தாயின்மடி மறந்தார்
உன்மீசு மடியோடு
தவழுகின்றார்
நெடுந்துயிலில் தழுவுகின்றார்
செத்த புல்லே!
சிறுபாயே!
உயிரோடு இருந்திருந்தால்
உடலெல்லாம் குளிர்ந்திருப்பாய்
பனித்துளியில் குளித்திருப்பாய்
பச்சையாய் வளைந்திருப்பாய்
பசுமாடு மேய்ந்திருக்கும்
பாலாறாய்ப் பொழிந்திருக்கும்
செத்துவிட்டாய் நீ!
மாட்டுக்கும் பயனில்லை
மனிதனுக்கே ஆளானாய்
செத்த புல்லே!
சிறுபாயே!

ஞானி

எழில்முதல்வன்

காலையல எழுநது
காலண்டர்த் தாளைக் கிழித்த போது
விழியில் கண்ணீர் பணித்தது:

ராத்திரி
வேலையை முடித்து
படுக்கையில் உடலைக் கிடத்திய போது
உள்ளம் துணுக்கம் உற்றது;

கோத்த மாலையில் ஒரு முத்து உதிர்ந்தது
என்று கருதி வருந்திற்று உள்ளம்!
அவல நெஞ்சத்தின்
ஓலப் புலம்பல்
செவிப் பறையைக் கிழித்தது.

இதற்கெல்லாம் அர்த்தம் ?
ஓஹோ—
புரியுதா?— எப்படிப் புரியும்?
புரிந்து கொள்ள் நீ என்ன ஞானியா?
போடா கொக்கு!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர்கள் உறுப்பினர்களிடம் ஆதரவு தேடி வாக்குவேட்டை ஆடுவது இயல்பு. நியாயமே. சிபார்சுக்கு சிலரை துணை கொள்வதும் சரிதான். ஆனால் எழுத்தாளர்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக இல்லாதவர்களும் உறுப்பினர்களில் வெவ்வேறு விதமான செல்வாக்கு உள்ளவரும் சேர்ந்து சிபார்சு கடிதங்களும் மகஜர்போல கையெழுத்திட்டு ஆதரவு வேண்டுகோள் சுற்றுக்கடிதங்களும் அனுப்பி, போனிலும், நேரிலும் பல தடவை சொல்லி பிரமாணம் வாங்குவது' போன்ற அளவுக்கு உறுதியும் வாங்கி, ஒரு குறிப்பிட்ட வேட்பாளர் வெற்றிபெறவும் மற்ற இருவரையும் தோற்க வைக்கவும் அவர்களுக்கு என்ன அக்கறை என்றும் இல்லாதது இந்த செயலாளர் தேர்தலில் வந்ததோ தெரியவில்லை, தேர்தல் என்றால் எல்லாம் இருக்கும் என்பது எனக்கும் தெரியும். ஆனால் எழுத்தாளர் சங்கத்துக்கு இது தேவையா? முப்பது ஆண்டுகளுக்கு மேலாக எழுதிவரும் நான், சங்கத்தோடு ஆரம்ப முதலே உறவு கொண்டிருக்கும் நான், சங்கம் இலக்கியத் தரமாக செயல் படாததை கண்டித்து, அந்தப் போக்கை மாற்ற விரும்பி சில திட்டங்களுடன் ஒரு ஆண்டுக்கு செயலாளர் ஆக விரும்பிய நான் தோற்கவேண்டும் என்று ஏன் இவ்வளவு வேகம் காட்டப்பட்டது? நான் செயலாளனாக வந்தால் சங்கம் மூழ்கிவிடுமா? அன்று க. நா. சு. வை ஒரு தடவை தோற்கடித்தது போகட்டும், இரண்டாம் தடவை நின்றாரே. தமிழ் நாட்டின் தலை சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரை அந்த தடவை என் தலைவராக வரவிட்டிருக்கக்கூடாது? அவர் வந்தால் சங்கம் குட்டிச்சுவராகிவிடுமா? ஏன் கச்சை கட்டினார்கள்? ஏன், எங்கள் இருவருக்கும் மட்டும் இந்த விதமான எதிர்ப்பு?

நாங்கள் தோற்றது எதனால் என்று கேட்டுக்கெரள்கிறேன். விமர்சகர்களாக இருந்ததாலா? அல்லது தற்காலப் பாங்கான தேர்தல் பிரச்சார வழி முறை கையாளாததாலா? குழுவிலோ கோஷ்டியிலோ சேராமல் சுத்த எழுத்தாளனாக இருந்ததாலா? இல்லை. இத்தனைக்கும் மேலாக, வகுப்பு உணர்ச்சி காரணமாகவா? கடைசி காரணத்தை நினைக்க நடுங்குபவன் நான். ஆனால் இந்த தேர்தல் அந்த கேள்வியை கேட்க வைத்துவிட்டது முதல் மூன்று காரணங்கள் கொஞ்சம் கொஞ்சம் பாதித்ததிருக்கலாம் ஆனால் நான்காவது காரணம்தான் அதிகமாக பாதித்திருக்கிறது என்பது க. நா. சு. தேர்தலில் மட்டும். இல்லை, என் தேர்தலிலும் தெரிகிறது. அரசியலில் இன்று வெளிப்படையாக இந்த உணர்ச்சி மறைந்து இருப்பது நல்ல சூழ்நிலையை உருவாக்கி வருகிறது. த. எ. சங்கத்தில் இது ஏன் இருக்கிறது? மூடிமறைப்பதைவிட புண்ணை கீறி ஆற்றிக்கொள்வது மேல் இல்லையா?

நுட்பமான விவரங்களை ஆராய்வது அசிங்கமானதாகும், வேண்டாம் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்கிறேன். கோமதி சாமிநாதன் செயலாளராக நிற்பதாக இருந்தது. எதிர் பிரசாரத்தின் போக்கை பார்த்து கசந்த மனதுடன் அவர் விலகிவிட்டார். சங்கத்தில் முக்கியமான பங்கு கொண்டு வந்திருப்பவர்களில் ஒருவர், 'கோமதி சாமிநாதன் நின்றால் அது கம்யூனலாக எல்லாம் வந்துவிடும், என்றார். கோமதி சாமிநாதனோ, நானோ, க, நா. சு வோ நின்றால் என் இந்த பிரச்னை வரவேண்டும் என்பதுதான் எனக்கு புரியவில்லை. நான் ஆரம்பத்தில் கொடுத்திருக்கும் தலைவர், செயலாளர் பட்டியலை, மீண்டும் பார்த்தால் தெரியும். விஷயம் புரியும்; அப்படியானால் க. நா. சு. வோ நானோ கோமதி சாமிநாதனோ தலைவராகவோ செயலாளராகவோ இன்றைக்கு மட்டும் இல்லை, என்றைக்குமே வரக்கூடாதா? தகுதி அடிப்படையில் கூட இடம் கிடைக்காதா? ஆறுதல் பரிசு பெறுவதுபோல என்றைக்கும் செயற்குழு உறுப்பினர், உபதலைவர் பதவியோடு தான் நின்றுவிடவேண்டுமா? த. எ சங்கத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கொஞ்சம் நினைத்துப்பார்த்து தங்கள் மனச்சாட்சிக்கு பதில் சொல்லிக் கொள்ளட்டும்.

அடுத்தபடி தேர்தல் வேடிக்கையை பார்ப்போம். 1966ம் ஆண்டு பேரவைக்கு வந்திருந்த உறுப்பினர்கள் 50 தான். 1967ல் 66 பேர்கள் வந்திருந்தனர். அப்போதும் இப்போதும் போல் உறுப்பினர்கள் அதிகம்தான். ஆனால் இந்த பேரவைக்கு 121 பேர்கள். (மொத்தம் சென்னை நகர உறுப்பினர் தொகை 192) சென்ற ஆண்டைப்போல இரண்டு மடங்கு. தேர்தல் பிரசாரத்தால் ஏற்பட்ட அக்கறை காரணம், வரவேற்கவேண்டியதுதான். இந்த 121 பேர்களும் தேர்தல் கடைசிவரை இருந்து முழு செயற்குழுவையும் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று நாம் நியாயமாக எதிர்பார்ப்போம்.

ஆனால் உபதலைவர்கள் தேர்தலுக்குப்பின் செயலாளர் தேர்தல் முடித்ததும் சுமார் 50 பேர்கள் உடனே போய்விட்டார்கள். அரசியல் கட்சி கூட்டங்களில் முக்கியமானவர் பேசியதும் கூட்டம் கலைகிற மாதிரி. பிறகு பொருளாளர், துணைச் செயலாளர்கள் தேர்தல் முடிந்து உறுப்பினர்கள் தேர்தல் வந்தபோது 50 சத விகிதம் தான் உறுப்பினர்கள் இருந்தார்கள். இந்த அறுபது பேர்களில் பெரும்பாலோர் ஒவ்வொரு ஆண்டும் வழக்கமாக கடைசிவரை இருப்பவர்கள், இதில் இன்னொரு வேடிக்கை இந்த அறுபது பேர்களில் 37 பேர்கள் செயற்குழு தேர்தலுக்கு நின்றார்கள் (13 ஸ்தானங்களுக்கு). செயலாளர் தேர்தலுக்கு மட்டும் வந்தவர்களைப் பற்றித்தான் பேச்சு. வருகிற போதே செயலாளர் தேர்தல் தானே முதலில் என்று கேட்டார்கள் சிலர். முன்னே பின்னே வந்திருந்தால் தானே

பேரவை செயல்முறை தெரிந்திருக்கும் பாவம்! உபதலைவர்கள் தேர்தலுக்குப் பிறகு என்றதும் அவர்களுக்கு பொறுத்திருக்கக்கூட மனமில்லை, 'வேலை இருக்கிறது, சீக்கிரம் போக வேண்டுமே போட்டுவிட்டு என்று பேசிக்கொண்டார்கள். 1965, 66, 67 மூன்று ஆண்டுகள் கணக்கு சீராகவில்லை. அதைப்பற்றி விவாதித்து முடிவு செய்யக்கூட அக்கறை இல்லை. தேர்தலைவிட அது முக்கியமான விஷயம் என்பதையே மறந்துவிட்டார்கள். 'சரி, ஒப்புக்கொண்டாச்சு, ஏதோ செய்யுங்கள்' என் மனப்பான்மையுடன் அடுத்த ஐடம் தேர்தலுக்குத் தான் பறந்தார்கள். செயலாளர் தேர்தலில் வாக்கை பெட்டியில் போட்டுவிட்டு உட்காராமலேயே ஹாலை விட்டு வெளியேறினார்கள் தனி உரிமை பெற்று முதலில் ஓட்டுப்போட்டுவிட்டு தேர்தல் முடிவுக்காக காத்திருக்காமல் போனார்கள். தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும் பலத்த கரகோஷம் செய்துவிட்டு அப்படியே ஜண்டையாக வெளியேறினார்கள். வந்திருந்த உறுப்பினர் பாதிப்பேருக்கு செயலாளர் ஒன்றுதான் குறிக்கோள். மீதி 20 பேர்கள் தோதல் பற்றி அக்கறையே இல்லை. தலைவர், செயலாளர் முக்கியம்தான். ஆகவே செயற்குழு சரியாக அமையாவிட்டால் சங்கம் செயல்படாது என்பதை அவர்கள் உணரவில்லை. ஏதோ வந்த ஒரே காரியம் வெற்றி. அதுபோதும் அவர்களுக்கு சங்கம் பற்றிய அவர்கள் அக்கறை அவ்வளவுதான்.

இன்னும் ஒரு விஷயம் மாதிரிக்கு என் வாக்கை எனக்கே போட்டுக்கொள்ள நான் தவறி விட்டாலும், என் ஆப்த நண்பர் வாக்கு எனக்குத்தான் சத்தியமாய். அவர் வாக்களிக்க வரவில்லை. பிறகு சந்தித்தபோது, 'நான் வந்திருந்தாலும் உங்களுக்கு ஓட்டு போட்டிருக்க மாட்டேன்' என்றார். அதோடு 'கிருஷ்ண பரமாத்மா சத்யம் வாங்கின மாதிரி ஒரு நாள் சிபார்சுடன் வந்து ஆதரவுகேட்டார்கள். நான் வந்தால் உங்களுக்கு ஓட்டுப்போடுகிறேன்' என்று வாக்களித்து விட்டேன். அ க்குப் பிறகுதான் செல்லப்பாவும் நிற்கிறார் என்றார்கள்' என்றார். நாங்கள் சிரித்தோம். இன்னொருவர் வீடு தேடிவந்து இதேமாதிரி சொன்னார். ஒருவர் கடிதம் எழுதினார். என்னைப்போல இன்னொரு வேட்பாளரும் சில சுவாரஸ்யமான தகவல்களை சொல்லக்கூடும். ஆக, போரிலும் காதலிலும் எதுவும் நியாயம்' என்பது தேர்தலுக்கும் பொருந்தும் போலும்!

இதெல்லாம் நடந்தாகிவிட்டது. சிந்திப்போன பால்தான். பாத்திரத்தில் மீதியிருக்கும் பால் விஷம் கலந்த பாலாக ஆகிவிடக்கூடாது. எழுத்தாளரிடையே, எழுத்தாளர் சங்கத்திலே இந்த விஷம் பரவக்கூடாது; ஏன் இருக்கவேகூடாது. கோஷ்டி பிரிந்து பலப்பரீட்சை பார்ப்பதோ, குறிப்பிட்ட எழுத்தாளன் வரக்கூடாது என்று கச்சை கட்டுவதோ அகௌரவமான காரியம். எழுத்தாளர்களுக்கு ஆகாது. இன்று பார்க்கிறோம் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம் பிள்ளைக்கு சிலை. கப்பலில் இருந்து குதித்து இரவில்கடலை கடந்த புரட்சி வீரன் வ. வே. சு. அய்யரைப் பற்றி பேச ஒரு வாய் இல்லை. புரட்சி கவிஞன் பாரதிதாசனுக்கு சிலை. ஆனால் 'அக்ரகாரத்தின் தனிப்பிறவி' என்று அடைமொழி பெற்ற புரட்சிவாழ்க்கை நடத்தியவன், புரட்சிநடைக்காரர் வ ரா. வைப்பற்றி பேச ஒரு வாய் இல்லை. ஏன், கல்கிக்கே சிலை இல்லை. புதுமைப்பித்தனை பாராட்டும் வாய்கள் கு. ப. ராஜகோபாலன் பெயரை உச்சரிக்கத் தயங்குகிறது. இதெல்லாம் எழுத்தாளர் உலகத்தில் இருக்கக்கூடாது. இலக்கியத்துறை எல்லா விருப்பு வெறுப்புக்கும் அப்பாற்பட்டது. அது என்றைக்கும் சுத்தமாக இருக்கவேண்டும். தமிழ்மொழி வளர, தமிழ் இலக்கியம் வளமாக இதெல்லாம் நாட்டுக்கு உதவுமா என்று எழுத்தாளர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். தமிழ் எழுத்தாளர் சங்கம் மேலே குறிப்பிட்ட சூழ்நிலையிலிருந்து சுத்தப்படவேண்டும். நான் இந்த வரிகளை எழுதியதின் நோக்கம் இது தான்.

— சி. சு. செ.

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT EZHUTTHU TAMIL MONTHLY

Form IV

See Rule 8

1. Place of Publication ; Madras
2. Periodicity of its Publication : Monthly
3. Printers name : M Ramanatha rao
   Nationality : Indian
   Address : 97, Big Street, Triplicane Madras-5.
4. Editor and Publisher's Name :
   C. S CHELLAPPA
   Nationality : Indian
5. Name & Address of individuals who own the news paper and partners or share holders holding more than 1% of the total Capital | C. S. Chellappa, 19-a, Pillair Koil Street, Triplicane, Madras-5

I. C. S. Chellappa hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1—3—68

C. S. CHELLAPPA
Publisher.